Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 21, 2022

வெள்ளிக்கிழமை ஜனவரி 21, 2021 | ஒளி: 07 கதிர்: 211 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




## டெங்கொழிப்பு தீவிரமாகிறது

'சுத்தமான சூழல்; ஆரோக்கியமான நாளைய தினம்' என்ற தொனிப்பொருளின் கீழ், நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்று (20) ஆரம்பமான இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, இன்றைய தினமும் (21) முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



திருவிழாவில்

## தீ மிதித்த இளம் தாய் மரணம்

கொழும்பு, ஆமர் வீதியில் அமைந்துள்ள கோவிலொன்றில் இடம்பெற்ற வருடாந்த தீ மிதிப்பு உற்சவத்தில் கலந்துகொண்ட 26 வயதுடைய பெண்ணொருவருக்கு ஏற்பட்ட தீக்காயத்தை தொடர்ந்து, அவர் உயிரிழந்துள்ளார் என, பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைத்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்தவரும் 10 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயுமான அக்குருவிட்ட ஆராச்சிகே இரேஷா மதுரங்கனி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஆணையை மீறமாட்டோம்

### பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி தெரிவித்தார்

தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை மறந்துவிட்டு, வழமையான இனவாத நடவடிக்கைகளை முன்னெடுக்கவே ஜனாதிபதி நினைத்துள்ளார். ஆனால், எம்மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையை நாம் ஒருபோதும் மீற மாட்டோம் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (20) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒருவார காலத்துக்கு ஒத்திவைத்ததற்கான காரணமென்ன என்பதை தெரிவிப்பார் என எதிர்பார்த்தோம். ஆனால் அதற்கான பதிலை ஜனாதிபதி அளிக்கவில்லை என்றார்.

தொடர்ச்சி P2



## மைத்திரியை நீக்கவும்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டமைக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## புலமைப்பரிசில் பரீட்சைக்கு விசேட மத்திய நிலையம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளில், கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு, விசேட மத்திய நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



பால் கொடுப்பனவு

## ரூ.5ஆல் அதிகரிப்பு

பால் பண்ணையாளர்களுக்கு ஒரு லீற்றர் திரவப் பாலுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ தலைவர் லசந்த விக்கிரமசிங்க, நேற்று (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இந்திய உடன்படிக்கையை

## சபைக்கு ஆற்றுப்படுத்துவேன்

இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மிகத் தெளிவாகவும் முறையாகவும் செய்துகொள்ளப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி உடன்படிக்கையை சபைப் படுத்துவேன் எனவும் அமைச்சர் கம்மன்பில சபையில் வாக்குறுதியளித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (20) இடம்பெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

புலம்பெயர் இலங்கையர்களின்

## வைப்புகளுக்கு உயர்வட்டி வீதம்



2022 பெப்ரவரி 1முதல் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகள், ஏனைய முறைசார் வழிகளூடாக ரூபாய்க் கணக்குகளுக்கு பணம் அனுப்பப்படுகின்ற போது பரிமாற்றல் ஒன்றுக்கு ரூ.1,000 கொடுப்பனவு செய்வதன்

தொடர்ச்சி P2



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## பூஜித்தவை விடுவிப்பதா, இல்லையா? 18இல் உத்தரவு

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சியப்பதிவுகளை கொழும்பு மேல் நீதிமன்றம். நேற்று (20) நிறைவு செய்தது.

தொடர்ச்சி P2



## எரிபொருள் நெருக்கடிகள் விமான சேவைகளைப் பாதிக்காது

எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியானது ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸையோ அல்லது நாட்டிலுள்ள ஏனைய விமான சேவைகளையோ பாதிக்காது என, விமான போக்குவரத்து மற்றும் முதலீட்டு வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திடம் அடுத்த ஒன்றரை மாதங்களுக்குப் போதுமான எரிபொருள் கையிருப்பு இருப்பதாக இராஜாங்க அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

கட்சி என்ற வகையில்

## சு.க பொறுப்புடன் செயற்பட வேண்டும்

ஒரு கட்சி என்ற வகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று (20) கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## சரத்துக்கு கொரோனா



**"திடீர் நோய் காரணமாக பி.சி.ஆர் சோதனை செய்யப்பட்ட நிலையிலேயே அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஓய்வு பெற்ற றியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் நேற்று (20) அவர் அனுமதிக்கப்பட்டார்.

திடீர் நோய் காரணமாக பி.சி.ஆர் சோதனை செய்யப்பட்ட நிலையிலேயே அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வெள்ளை வேன் வழக்கு: விசாரணைக்கு திகதி குறிப்பு

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சர்ச்சைக்குரிய வெள்ளை வேன் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று (20) தீர்மானித்தது.

**"இந்த வழக்கில் கணினி மூலம் உருவாக்கப்பட்ட சாட்சியங்களை பிரதிவாதி தரப்பினரால் இதுவரை ஆராய முடியவில்லை எனவும், இது தொடர்பில் வழக்கு விசாரணையின் போது ஆட்சேபனைகளை முன்வைக்க எதிர்பார்ப்படுகிறன்றது**

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதியான ராஜித சேனாரத்ன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, இந்த வழக்கில் கணினி

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஆணையை மீறமாட்டோம்

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை செய்யாது தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாது. ஒரே விடயத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதால் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை என்றார்.

அதேபோல் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதில் ஜனாதிபதிக்கு மாற்று சிந்தனையொன்று இருக்கும் எனவும், அது அவரது மனதில் இருந்து வெளிவரும் எனவும் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளாக நாம் ஜனாதிபதியின் உரையில் எதிர்பார்த்தோம் என்றார்.

பாராளுமன்றம் மீண்டும் கூடிய போது, புதிய அரசியல் அமைப்பு ஒன்றினை உருவாக்குவது, சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இறுதியாக உருவாக்கப்பட்ட மூன்று அரசியல் அமைப்புகளையும் தமிழர்கள் நிராகரித்த நிலையில், அல்லது தமிழர்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்ட நிலையில் கடந்த 74 ஆண்டுகளாக நாடு அடிப்படை கட்டமைப்பில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் அதனை தீர்க்கும் விதமாக ஜனாதிபதியின் உரை இருக்கும் என எதிர்பார்த்தோம் என தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எதிர்கட்சியின் ஆசனங்களில் அமர, தமிழ் மக்களின் ஆணையை கேட்ட வேளையில், சமஷ்டி முறையில் தீர்வுகளை பெறுவது மற்றும் தமிழர் தேசத்தை அங்கீகரிக்க தமிழ் மக்கள் எமக்கு கொடுக்க ஆணையானது அரசாங்கங்கள் பெற்றுக்கொண்ட ஆணையை விடவும் மேலானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## சபைக்கு ஆற்றுப்படுத்துவேன்

அங்கு உரையாற்றிய அமைச்சர் கம்மன்பில மேலும் கூறுகையில்,

இன்றைய நெருக்கடிக்கு கொரோனா காரணம் அல்ல; 1955 ஆம் ஆண்டில் இருந்து கடன்களை பெற்று வருமானத்தை விடவும் அதிகமாக செலவுகளை செய்ததற்கான விளைவுகளையே இன்று நாம் அனுபவித்து வருகின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்றால் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் இந்த வெடிப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் கொரோனா காரணமாக முன்கூட்டியே நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. ஆகவே இந்த நிலைமைக்கு இதுவரை காலமாக ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக்கூறியாக வேண்டும்.

இப்போது ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டு இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியாது. நாம் இன்று நெருக்கடியில் உள்ளோம் என்ற உண்மையை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும், உண்மை கசப்பாக இருந்தாலும் அதனை எம்மால் நிராகரிக்க முடியாது.

இந்த நாட்டின் உரிமையாளர்கள் மக்களே, எனவே அவர்களுக்கு உண்மையைக் கூறியாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## வைப்புகளுக்கு உயர்வட்டி வீதம்

மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பணப் பரிமாற்றல் செலவினை மீள வழங்கவேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புகள் இரண்டுக்கும் உயர்வான வட்டி வீதங்களை அறிமுகப்படுத்தல் வேண்டும் என்றும் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 50 அடிப்படை புள்ளிகளால் 5.5% மற்றும் 6.5% ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, நிலையான வைப்பு மற்றும் கடன் வசதி விகிதங்களை திருத்துவதற்கும், எரிபொருள் கொள்வனவுக்கான அத்தியாவசிய இறக்குமதி கட்டணங்களை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்ட அனைத்து சுற்றுலா நிறுவனங்களுக்கும் இலங்கைக்கு வெளியில் வழங்கப்படும் சேவைகளுக்கு அந்நிய செலாவணியை மட்டுமே ஏற்றுக்கொள்ளுமாறும் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.


# டயலொக் ஆசிஆட்டா மனுசத் தெரணவுடன் இணைந்து 100,000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு டேட்டா புலமைப்பரிசீலினை விரிவுபடுத்துகிறது





**நெனதிரி டேட்டா புலமைப்பரிசில் திட்டத்தினூடாக நாடு முழுவதும் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் ஆன்லைன் கற்றலை வீட்டிலிருந்தவாறே தொடர்ந்து முன்னெடுக்க தேவையான டேட்டாவை புலமைபரிசில் அடிப்படையில் பெறுகிறார்கள்.**

எந்தவொரு பிள்ளையும் கல்வியை தொடர்வதில் பின்தங்கியிருக்க கூடாது என்பதை உறுதிப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மனுசத் தெரணவுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் உள்ள 470 பாடசாலைகளில் உள்ள 103,478 மாணவர்கள் வீட்டிலிருந்து ஆன்லைனில் கல்வியினை தொடர்வதை உறுதிப்படுத்தும் வகையில் "நெனதிரி டேட்டா புலமைப்பரிசில்" திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக உதவியது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட நெனதிரி டேட்டா புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம், 'டயலொக் ஆசிஆட்டா உடன் மனுசத் தெரண' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாணவருக்கும் 3 மாதங்களுக்கு அவர்களின் கல்வி செயற்பாடுகளுக்காக 10GB டேட்டா வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை நிர்வாக அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, "தொற்றுநோயின் பின்னணியில், இந்த தகுதியுள்ள பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு நிதி நிவாரணம் வழங்கும் அதே வேளையில், டிஜிட்டல் பிளவைக் குறைத்து எங்கள் தேசத்தை ஆதரிக்கக்கிடைத்தமையினையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கோவிட்-19 பரவலை தொடர்ந்து கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை குறைக்கும் வகையில் டயலொக் நமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான வளங்களை அவர்களுக்கு அளித்து ஒளிமயமான எதிர்காலத்தைத் தொடர வழிவகை செய்வதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உறுதிபூண்டுள்ளது"

நாடு முழுவதும் உள்ள மாணவர்களை அவர்களின் கல்வி முயற்சிகளுடன் ஆதரிக்கும் தொடர் முயற்சிகளில் இது டயலொக்கின் மற்றொரு முயற்சி. இந்த முயற்சிக்கு மேலதிகமாக, நெனச முன்னெடுப்பின் கீழ் பலவிதமான கல்வி தளங்களை டயலொக் வழங்குகிறது Nenasa TV, Nenasa Educational App, Nenasa Smart School மற்றும் கட்டணமில்லா Nenasa 1916 தொலைதூர உதவி அழைப்பு சேவை ஆகியன அடங்கும். டயலொக் மெரிட் புலமைப்பரிசில் திட்டங்கள் உயர்தர மாணவர்களின் உயர்கல்வியை ஆதரிக்கின்றன. இந்த முயற்சிக்கு மேலதிகமாக, டயலொக் தனது கல்விசார் பக்கேஜில் நெனச சிங்களம், நெனச தமிழ் மற்றும் குரு TV அலைவரிசைகளுக்கான இலவச அணுகலை டயலொக் டெலிவிஷன் மற்றும் ViU App மூலம் நீட்டித்தது. மிக சமீபத்தில், 2021 உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் வகையில், நிறுவனம் நாடு முழுவதும் உள்ள 379 குழந்தைகள் மேம்பாட்டு மையங்களுக்கும் இலவச புரோட்பாண்ட் இணைப்பை வழங்கியது. மேலும், இ-தக்ஸலாவா, தேசிய கற்றல் உள்ளடக்க மேலாண்மை அமைப்பு (LCMS) / கற்றல் மேலாண்மை அமைப்பு (LMS) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரத்திற்குப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களின் அனைத்து உத்தியோகபூர்வ மின்-கற்றல் தளங்களுக்கும் எந்தவொரு டேட்டா கட்டணமும் இன்றி நிறுவனம் இலவச அணுகலை நீட்டித்தது.


## சு.க பொறுப்புடன்...

உள் விவகாரங்கள் ஏதேனும் இருந்தால், அவை அமைச்சரவைக் கூட்டத்திலோ, அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலோ அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டத்திலோ மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்று அரசியல் தலைமைகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் தற்போதைய நிர்வாகம் முன்னோக்கிச் செல்ல முடியுமா என ஊடகவியலாளர்கள் வினவியபோது, தனிநபர்கள் ஆட்சி செய்வதற்காக பொது மக்கள் வாக்களிக்கவில்லை என்றும், தெரிவுசெய்யப்பட்ட அரச தலைவரின் கொள்கைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்படுமாயின் பிரஜைகள் அறிவார்கள் என தெரிவித்த அவர், அரசாங்க அரசியல்வாதிகள் என்ற வகையில் கருத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு எனவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், இந்தத் தீர்மானம் தமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பம் எனவும் தெரிவித்தார்.

## வெள்ளை வேன்...

மூலம் உருவாக்கப்பட்ட சாட்சியங்களை பிரதிவாதி தரப்பினரால் இதுவரை ஆராய முடியவில்லை எனவும், இது தொடர்பில் வழக்கு விசாரணையின் போது ஆட்சேபனைகளை முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இதன்படி, இந்த வழக்கின் அடுத்த கட்டம் தொடர்பில் பரிசீலிக்க பெப்ரவரி 18ஆம் திகதி அழைக்கப்படும் என்று உத்தரவிட்ட நீதிபதி, இந்த வழக்கின் சாட்சிய விசாரணை மார்ச் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று உத்ரவிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கொழும்பில் சகல வல்லி ஆராச்சிகே சரத் குமார மற்றும் அதுல சஞ்சீவ மதநாயக்க ஆகிய இரு நபர்களை வைத்து ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.

அதில், வெள்ளை வேன்களில் ஆட்களை கடத்திச் சென்றமை மற்றும் கொள்ளை, கொலை உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் பொய்யான தகவல்களைப் பரப்பி அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இருவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூஜித்தவை விடுவிப்பதா, இல்லையா?

மேலும், பூஜித் ஜயசுந்தரவை விடுதலை செய்வதா அல்லது பிரதிவாதி சாட்சியத்தைப் பெறுவதா என்பது தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி 18ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சிய விசாரணை முடிவடைந்துள்ளதாக முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றுக்கு அறிவித்தார். அதை பரிசீலித்த நீதிபதிகளான நாமல் பல்லாலே, ஆதித்ய படபெந்திகே, மொஹமட் இர்ஷாதீன் ஆகியோர் அடங்கிய குழாம் மேற்குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்தது.

ஹேமசிறி பெர்னாண்டோ, பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக 855 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரிகையை சட்டமா அதிபர் இதற்கு முன்னர் தாக்கல் செய்தார்.

## எரிபொருள் நெருக்கடிகள்....

கடந்த வாரத்தில் 32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டதாகவும், எதிர்காலத்தில் எரிபொருள் கொள்வனவுக்கான ஆர்டர்கள் வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

## சரத்துக்கு கொரோனா

இந்த நிலையில், அவருடன் தொடர்பில் இருந்தவர்களை சுகாதாரத் தரப்பினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராகவும் கடமையாற்றியுள்ள ஓய்வு பெற்ற றியர் அட்மிரல் சரத் வீரசேகர, அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மைத்திரியை நீக்கவும்

தாம் உருவாக்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் அழித்து விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

## டெங்கொழிப்பு தீவிரமாகிறது

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சு, தேசிய டெங்கு ஒழிப்பு பணியகம் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இந்த வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 5,200 இற்கும் அதிக டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் இந்திக வீரசிங்க தெரிவித்தார்.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அமித் ஜயசுந்தர, கொரோனா தொற்றுக்கு மாணவர் உள்ளாகி இருந்தால், அவர்களை பெற்றோர் சிறப்பு பரீட்சை மையங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றார்.

விசேட பரீட்சை நிலையங்கள் தொடர்பான தகவல்களை, பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். ரெபிட் அன்டிஜன் சோதனை அல்லது பி.சி.ஆர் சோதனை அறிக்கையை பரீட்சை நிலையக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கொரோனா தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு வசதியாக 108 பரீட்சை மையங்கள், 496 ஒருங்கிணைப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

## ரூ.5ஆல் அதிகரிப்பு

இந்த விலை கொடுப்பனவு, பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும் என தெரிவித்த லசந்த விக்கிரமசிங்க, பால் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த விலை உயர்வால், பண்ணையாளர்களுக்கு மிக உயர்ந்த தரமான பாலுக்கு லீற்றருக்கு சுமார் ரூ.100 கிடைக்கும் என்றும், பாலின் தரத்தைப் பொறுத்து செலுத்த வேண்டிய தொகை நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பால் பண்ணையாளர்களால் வழங்கப்படும் பாலின் அளவுக்கேற்ப லீற்றருக்கு செலுத்தப்படும் தொகையும் மாறுபடும் என்றும், லீற்றரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது பண்ணையாளர்களின் வருமானமும் அதிகரிக்கும் என்று மேலும் தெரிவித்தார்.

## தீ மிதித்த இளம் தாய் மரணம்

குறித்த கோவிலில் கடந்த 14ஆம் திகதி இரவு வருடாந்த தீ மிதிப்பு உற்சவம் இடம்பெற்றிருந்ததோடு, தீ மிதிப்பில் கலந்துகொண்ட குறித்த பெண்ணின் உள்ளங்கால் தீக்காயங்களுக்கு உள்ளானதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் தீக்காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளாது கவலைக்கிடமான முறையில் இருந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதோடு, கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி அஷ்ரப் ரூமி பிரேத பரிசோதனையை மேற்கொண்டுள்ளார்.



## கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாவது

# மீண்டும் அதிகரிப்பு

கொவிட்தொற்றுக்கு உள்ளாகும் கர்ப்பிணிப்பெண்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் தெரியவருவதாக, சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட பெண்கள் மற்றும் மகப்பேற்று விசேட வைத்தியர், பேராசிரியர் சனத் லெனரோல், "கடந்த இரண்டு, மூன்று வாரங்களில் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை தொடர்பில் எம்மால் அவதானிக்க முடிகின்றது.

"இந்நிலையில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சுகாதாரப்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்குமாறும் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்"என்றார்.

அத்துடன், பொதுவிடங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ள அவர், தங்களது வீடுகளிலேயே தங்கியிருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இரண்டாவதுகொவிட்-19 தடுப்பூசியைபெற்று, மூன்று மாதங்கள் கடக்கும் பட்சத்திலுள்ள கர்ப்பிணிகள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறும், அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



## தங்கம் வென்றவருக்கு

# பிரதமரால் வீடு அன்பளிப்பு

டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பிப்பில் 2020 ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி, இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்றுக்கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று முன்தினம் (19) புதிய வீடொன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலையீட்டின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட இவ்வீட்டுக்கான 'அன்பளிப்பு பத்திரம்,' தங்கப் பதக்கம் வென்ற வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு பிரதமரால் வழங்கிவைக்கப்பட்டது.

தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு புதிய வீடொன்றை பெற்றுக்கொடுக்குமாறு, கடந்த ஆண்டு செப்டெம்பர் 08ஆம் திகதி பிரதமர் குறிப்பிட்டிருந்ததற்கு அமைய, அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகார சபைக் குரிய கொழும்பு 02 கொம்பனித் தெருவில் அமைந்துள்ள மெட்ரோ ஹோம்ஸ் வீடமைப்புத் திட்டத்தின் 40 ஏ 4/10 இலக்க வீடு, தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தற்போது இலங்கையில் பரா வீர, வீராங்கனைகளின் திறமை உயர் மட்டத்தில் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, எதிர்காலத்தில் தேசிய விளையாட்டுப் போட்டியில் பரா விளையாட்டுகளையும் சேர்க்கும் யோசனை குறித்து பிரதமருக்கு விளக்கமளித்தார்.

## முல்லைத்தீவின்

# தங்க மகளுக்கு எம்.பி வாழ்த்து

பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்த முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவிக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும்நிலையில் குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி, பாகிஸ்தானில் இடம்பெற்றும் சர்வதேசப் போட்டியில் பங்குகொள்ள தெரிவாகி, பாகிஸ்தான் சென்றிருந்தார்.

செவ்வாய்கிழமை (18) பாகிஸ்தானின் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50-55 கிலோகிராம் எடைப்பிரிவின் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியில் கணேஷ் இந்துகாதேவி தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

இந்நிலையிலேயே, அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "கணேஷ் இந்துகாதேவி, தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பிலேயே வசித்து வருகின்றார். கணேஷ் இந்துகாதேவியின் வெற்றியில் அவரது தாயார் படும் துன்பங்கள் மறைந்து போயுள்ளன. இப்படியானதொரு தங்க மகளை நாட்டுக்கு தந்த அத்தாயாருக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சர்வதேச அரங்கில் கணேஷ் இந்துகாதேவி தொடர்ச்சியாக இவ்வாறான வெற்றிகளைக் குவித்து, முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.








## புனரமைக்கப்பட்ட

# 'சிறிமதீபாய' பிரதமர் அலுவலகம் திறப்பு

கொழும்பு, மலர் வீதியில் அமைந்துள்ள "சிறிமதீபாய" பிரதமர் அலுவலகம் புனரமைக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் நேற்று (20) திறந்து வைக்கப்பட்டது.

நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி, புனரமைக்கப்பட்ட அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் மற்றும் அலுவலக வளாகத்தை பார்வையிட்டார். அலுவலகத்தின் கடமைகளை ஆரம்பிப்பதை முன்னிட்டு, தபால் அட்டையும் நினைவு முத்திரையும் ஜனாதிபதியின் தலைமையில் வெளியிடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பிரதமரின் முன்னாள் செயலாளர் காமினி செனரத்தின் மேற்பார்வையின் கீழ், இலங்கைக் கடற்படையினர் இந்த மாளிகையை புனரமைத்துள்ளனர். இந்த இரண்டு மாடி மாளிகையை, ஆல்பர்ட் இம்மானுவேல் டி சில்வா, தனது மகன் சர் ஆல்பர்ட் ஏர்னஸ்ட் டி சில்வாவுக்காக, 1916இல் நிர்மாணித்தார். இது, 1960ஆம் ஆண்டு அவரின் மறைவுக்குப் பின்னர் குடும்ப உறுப்பினர்களால் அரசாங்கத்துக்கு கையளிக்கப்பட்டது. கல்வி மற்றும் வானொலி அமைச்சு, உள்ளூராட்சி மன்றம் மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியன, அக்காலத்தில் சிறிமதீபாயவில் இயங்கி வந்ததோடு, 1978ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசஸவினால் சிறிமதீபாயவில் பிரதமர் அலுவலகம் நிறுவப்பட்டது. நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான "சிறிமதீபாய", சுமார் 44 வருடங்களின் பின்னர் அதன் பழைய தோற்றத்துக்கே முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கண்பார்வை பிரச்சினைகள் இங்கு அதிகமாக உள்ளது

## கண் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டு



ஆசிய நாடுகளில் கண் பார்வை தொடர்பான பிரச்சினை அதிகமாக இலங்கையில் காணப்படுவதாக கண்வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தியாவில் 0.4 சதவீதமாகவும், நேபாளத்தில் 0.34 சதவீதமாகவும் கண் பார்வை தொடர்பான பிரச்சினை காணப்படும் நிலையில், இலங்கையில் 1.1 சதவீதமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலும் நாட்டின் சுகாதார துறை கட்டமைப்பு சிறந்த முறையில் காணப்படுகின்ற போதிலும், பார்வை தொடர்பான பிரச்சினையில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் நாடு காணப்படுகின்றமை மிகவும் கவலையளிப்பதாக கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் நரேஷ் பிரதான் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதுடன், பார்வை தொடர்பான சிக்கல்கள் குறித்து அறிந்துக் கொள்வது இன்றியமையாத விடயமெனவும் கூறியுள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் நரேஷ் பிரதான் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சிறார்கள் உள்ளிட்ட பொதுமக்களின் பார்வை தொடர்பான சிக்கல்கள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்க *Ceylon Eye Care Optometric Association* தயாராகவுள்ளதாக அதன் நிறுவுனர், கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் நரேஷ் பிரதான் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியில் செயற்படும் தமது நிறுவனம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் இணையதள பாவனை அதிகரித்துள்ளதால் சிறார்களுக்கு பார்வை பிரச்சினை வெகுவாக அதிகரித்துள்ளதாக கண் நோய் தொடர்பான விசேட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளதால், மாணவர்களுக்கு பார்வை தொடர்பில் சோதனைகளை மேற்கொள்ளுமாறு கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் கே.தயாளன் கூறியுள்ளார்.

சிறு வயதில் பார்வை குறைப்பாடுகள் மற்றும் கண்சார்ந்த ஏனைய குறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து உரிய சிகிச்சை பெற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் கே.தயாளன் தெரிவித்துள்ளார்.

கண்நோய் தொடர்பான விசேட நிபுணர்களுக்கான பற்றாகுறை, பொருளாதா சிக்கல், கண்நோய்க்கான சிகிச்சை நிலையங்களுக்கான பற்றாகுறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கண்நோய் தொடர்பில் பொதுமக்களின் ஈடுபாடு குறைவாக காணப்படுவதாக *Ceylon Eye Care Optometric Association* இன் விசேட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் கண்நோய் தொடர்பான சர்வதேச நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் தெளிவூட்டலை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கல்வி அமைச்சர்

# மட்டக்களப்புக்கு விரைவில் விஜயம்



கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, எதிர்வரும் வியாழக்கிழமை (27) மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விசேட விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் அவரது விஜயம் அமையவுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்கு பல்கலைக்கழகம், பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கல்வி மற்றும் உயர்கல்வித்துறை சார் அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலொன்றிலும் கல்வி அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட கதிரவெளி விக்கினேஸ்வரா தேசிய பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் கல்வி அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

## நீரிழிவு நோயாளிகளுக்கு

# விசேட அறிவிப்பு




நீரிழிவு நோயாளிகளுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெற்ற பின்னர் தலைச்சுற்றல் அல்லது காய்ச்சல் ஏற்படுவது பொதுவான அறிகுறிகளாகும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உட்சுரப்பியல் நிபுணர் மணில்க சுமனதிலக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும் இதனால் வருடாந்தம் 700 க்கும் அதிகமானவர்களின் கால்கள் அகற்றப்படுவதாகவும் தேசிய நீரிழிவு மத்திய நிலையம் அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் சகல பகுதிகளிலும், நீரிழிவு நோயால் பாதிப்படைந்தவர்கள் உள்ளதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டுப்பாடின்றி உணவு உட்கொள்ளுதல், மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றாமல் செயல்படுவது ஆகியனவே, நீரிழிவு நோய் அதிகரிப்புக்கான முக்கிய காரணம் எனவும் அந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்படுகின்ற நிலைமையானது, 30 வருடங்களுக்கு நீடிக்குமானால், இந்த நோயானது இரண்டு பேரில் ஒருவருக்கு என்ற கவலை தரும் நிலையை அடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, நாட்டு மக்களில் அரைவாசிப்பேருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் எனவும் ஓய்வின்மை, மாப்பொருள் சீனியுடனான உணவுளை அதிகம் உட்கொள்ளுதல், புதிய பழம் மற்றும் மரக்கறிகளை உட்கொள்ளாமை மற்றும் தேவையற்ற உணவுகளை உட்கொள்ளுதல் போன்ற முறைமைகள் காரணமாகவே நீரிழிவு நோய் அதிக அளவில் பரவுவதாகவும் நீரிழிவு மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

## மத்திய அதிவேக நெடுஞ்சாலையால்

# மூன்று நாள்களில் கோடி வருமானம்



அதுகல்புர நுழைவாயிலின் ஊடாக, முதல் 3 நாள்களில் 50,000 வாகனங்கள் பயணித்துள்ளதாகவும் அதன்மூலமாக 100 இலட்சத்துக்கு (1 கோடி) மேல் வருமானம் கிடைத்துள்ளதாகவும் ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

மீரிகமவில் இருந்து குருநாகல் வரையான பகுதி, கடந்த சனிக்கிழமை (15) திறந்து வைக்கப்பட்டதையடுத்து, முதல் 12 மணித்தியாலங்களுக்குள் பொதுமக்கள் இலவசமாக பயணிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (16) மதியம் 12 மணிக்குப் பிறகு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க கட்டணம் வசூலிக்கப்பட்டது.

இதன்படி, ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் திங்கட்கிழமை (17) நள்ளிரவு வரை 23,039 வாகனங்கள் பயணித்துள்ளன. இந்த மூன்று (03) நாள்களில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இந்தத் தினத்திலே சென்றுள்ளன. அன்றைய தினம் 4,865,500.00 ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம முதல் குருநாகல் வரையிலான பிரிவில் மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருநாகல் மற்றும் யக்கபிட்டிய ஆகிய இடங்களில் இடைமாற்று இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

செயலாளர்களுக்கு இடமாற்றம் வழங்கி

# நிர்வாகம் மறுசீரமைப்பு

■ வி.நிதர்ஷன்

வடமாகாண அமைச்சின் செயலாளர்களுக்கு நேற்றிலிருந்து (20) நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கி, மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் நிர்வாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகவும், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகவும் மாற்றம் பெற்றுள்ளனர்.

அத்தோடு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில் நந்தனன், பேரவைச் செயலக செயலாளராகவும், மாகாண ஆளுநரின் செயலாளர், திருமதி சரஸ்வதி மோகனநாதன்



சுகாதார அமைச்சின் செயலாளராக மாற்றம் பெற்றுள்ளார்.

மேலும், பேரவைச் செயலகத்தின் செயலாளர் பி.குகநாதன், பிரதிப் பிரதம செயலாளர், பொது நிர்வாகத்துக்கு மாற்றம் பெற்றுள்ள அதேவேளை, ஆளுநரின் செயலாளரின் இடத்துக்கு எவருமே நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா நகர சபையின்

# அதிகாரம் கைமாறியது

■ ஒவுமுதீன் கியாஸ்

கிண்ணியா நகர சபையின் புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் முகமது முஸ்தபா முஹம்மது நிவாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக தவிசாளர் பதவி வரிதாக்கப்பட்ட நிலையில் இருந்த கிண்ணியா நகர சபைக்கான புதிய தவிசாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக சபை, நேற்று( 20) கூடிய போதே, இவர் தெரிவு செய்யப்பட்டார்.

13 பேர் கொண்ட இந்தச் சபையில், நேற்றைய தவிசாளர் தெரிவின் போது, 13 உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தனர். இதில்



புதிய தவிசாளருக்கு 6 வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட அய்யூப் சப்ரின் 3 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

இதன்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஓர் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தில் இருந்த கிண்ணியா நகர சபையின் 2022 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த டிசெம்பர் மாதம் இருமுறை சமர்பிக்கப்பட்ட போதும், இரு முறையும் தோற்கடிக்கப்பட்டது.

இதன் காரணமாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப, புதிய தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது.



# மதுபான நிலையத்தில் தீ

■ க.அகரன்

வவுனியா, வைரவ புளியங்குளத்தில் உள்ள மதுபான நிலைமொன்று, நேற்று (20) அதிகாலை தீப்பிடித்து எரிந்துள்ளது.

அதிகாலை 3.50 க்கு தீ பற்றிய நிலையில் வவுனியா நகரசபை தீ அணைக்கும் பிரிவினர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டும் தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், கட்டடம் முழுவதும் தீ பரவியது.

இந்தத் தீ விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார்

# கும்பாபிஷேகம்

■ எஸ்.தில்லைநாதன்



யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் கோவிலின் மகா கும்பாபிஷேகமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்ச தள இராஜகோபுர கும்பாபிஷேகமும், நாளை மறுதினம் (23) நடைபெறவுள்ளன.

கும்பாபிஷேகத்தை, கல்வியங்காடு சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ணக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து காலை 10.32 மணி முதல் 11.22 மணி வரையிலான சுப வேளையில் நடத்தி வைப்பார்.

பக்தர்கள், நாளை சனிக்கிழமை (22) காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தலாம்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

# மூன்று நாள்களில் 17 மாணவர்களுக்கு கொரோனா

■ எம்.எஸ்.எம். ஹனீபா



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த 03 நாள்களுக்குள் 17 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ். அகிலன், இன்று (20) தெரிவித்தார்.

காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்ட மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது, இவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இரு வாரங்களுக்குள் அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

பரவலாக தடிமல், காய்ச்சல் உள்ளவர்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.



கிழக்கு ஆளுநருடன்

# தெற்காசிய இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

■ ஹஸ்பர்

ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று, திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கையின் கல்விக்காக, மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் அளவை அதிகரிப்பது தொடர்பாக ஆளுநர் இதன்போது எடுத்துரைத்தார்.

மேலும், கிழக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் நடப்பு விவகாரம் உள்ளிட்ட விடயங்களும் பேசப்பட்டன.



# ஒட்டுசுட்டானுக்கு புதிய செயலாளர்

■ சண்முகம் தவசீலன்

ஒட்டுசுட்டான் புதிய பிரதேச செயலாளராக திருமதி ஜெயராணி பரமோதயன், நேற்று முன்தினம் (19) கடமைகளைப் பொறுபோற்றுக்கொண்டார்.

இதுவரை காலமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய த.அகிலன், கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அந்நிலையில், இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகக் கடமையாகிய திருமதி ஜெயராணி பரமோதயன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக தனது கடமைகளைப் பொறுபோற்றுக்கொண்டார்.



ஏலம் கேட்கும் பணம் கிடைக்காமையால்

# கிளிநொச்சி தேங்காய் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி பொதுச் சந்தையில் தேங்காய்க்களுக்காக ஏலத்தில் கேட்டும் பணத்தை வழங்காமையால் தேங்காய் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேங்காய்கள் சந்தைக்கு கொண்டு செல்லும் உற்பத்தியாளர்களிடம் ஏலத்தில் கூறப்படுகின்ற பணம் வழங்கப்படுவதில்லை எனவும் ஒரு ரூபாய் தொடக்கம் இரண்டு ரூபாய் வரை குறைத்தே பணம் வழங்கப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, ஏலத்தில் குறிப்பிடப்படும் பணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேங்காய் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மணல் அகழ்வை கட்டுப்படுத்த

# இராணுவ காவலரண் அமைக்க முடிவு

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவ காவலரண்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வினால் மாவட்டம் சவால்களை எதிர்கொண்டு வருவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரணைமடு குளத்தின் கீழ் உள்ள ஆற்றுப்படுக்கையில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்தும் பாரியளவில் இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர்,



கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர், நேற்று முன்தினம் (19) நேரடியாக சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

நிலைமைகளின் ஆபத்தை உணர்ந்துகொண்ட அதிகாரிகள், குறித்த பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இராணுவ காவலரண்களை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.





# பாரம்பரியத்துடன்...

தமிழர்களின் நெல் அறுவடை ,பொங்கல் நிகழ்வுகளின் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டும் வகையிலான நெல் அறுவடையும் பொங்கல் நிகழ்வும், திருகோணமலை – வெருகல் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் எம்.எச்.முஹமட் கனி தலைமையில், வெருகல், ஈச்சிலம்பற்று பகுதியில் நேற்று (20) நடைபெற்றன. இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டி கோரல முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது, அதிதிகள் வயலுக்குச் சென்று பூஜை வழிபாடுகள் செய்து, பாரம்பரிய முறைப்படி நெல்லறுத்து, நெற்கதிர்களை மாட்டு வண்டியில் ஏற்றி வந்தனர்.

அதன்பின் பூஜை வழிபாடுகள் செய்து அம்மில் வைத்து நெற்கதிர்களை அடித்து, உரலில் வைத்து நெல்லை இடித்து அரிசியாக்கி, பொங்கல் பானையில் வைத்து பொங்கச் செய்திருந்தனர். இந்நிகழ்வானது பாரம்பரிய முறைப்படி இடம்பெற்றிருந்தது.

இதன்போது வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விவசாய சங்கங்கள், சமூக அமைப்புக்கள் இணைந்து 100 பானைகளில் பொங்கல் பொங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் – தீஷான் அஹமட்)





சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பெற்ற

# பதினெட்டு பேர் வட்டகொடையில் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை, யொக்ஸ்போட் தோட்டத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபை பிரிவினரால் நேற்று முன்தினம் (19) இரவு இவர்கள் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்தில் வீடமைப்பு திட்டத்தின் கீழ் 20 தனிவீடுகள் அமைக்கப்பட்டுள்ளன., அந்த வீடுகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் குறித்த குடியிருப்பின் உரிமையாளர்கள் அந்த குடியிருப்புகளுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மின் இணைப்பிலிருந்து சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுள்ளனர் என, கிடைத்த தகவலுக்கு அமையவே இலங்கை மின்சார சபையின் அவசர சுற்றிவளைப்பு பிரிவினர், கொம்பனித்தெரு பொலிஸார், தலவாக்கலை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் பெண்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்களை நேற்று (20) நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.





# கைகளைய கடிக்கும் மீன்கள்

ஹட்டன் நகரத்திலுள்ள மீன் விற்பனை நிலையங்களில் மீன்களின் விலைகள் ஒரே தடவையில் அதிகரித்தமையால், நுகர்வோர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மரக்கறிகளின் விலையேற்றத்தால், ஹட்டன் நகரம் உள்ளிட்ட பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறான சிரமங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், மீன்களின் விலைகளும் ஒரே தடவையில் அதிகரித்துள்ளமையால், தாங்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

ஹட்டன் நகரிலுள்ள மீன் விற்பனை நிலையங்களில், ஒரு கிலோ கிராம் கெலவல்லா ரூ.1,600, தோறா ரூ.1,200 கொப்பரா ரூ.2,200, பரோவி ரூ. 1,200 கும்பளா ரூ. 800, வன்ன பரவி ரூ. 700, மொருல்லோ ரூ.580, ஹபரலி ரூ.800, பலயா ரூ.700, பொடி தெல்லோ ரூ.1,200, இறால் ரூ.1,400, லின்னா ரூ.600, பியா மெஸ்ஸோ ரூ.580, சாலையோ ரூ.300, சுரா பரவி ரூ. 600, பன்னாவோ ரூ.700 என்ற அடிப்படையில் விற்கப்படுகின்றன என்றும் நுகர்வோர் தெரிவித்தனர்.

இந்நிலையில், மீன்களுக்கான கேள்விகள் அதிகரித்துள்ளமையால், விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மீன் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அப்பர் கிப்ஸனில் முதியவரின் சடலம் மீட்பு



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலேகால கிராமத்தின் அப்பர் கிப்ஸன் பகுதிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட பெருமாள் சுப்பிரமணியம் (வயது 74) மரணம் தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளனவென நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கால்நடைகள் மேய்த்துவரும் இவர், திருமணம் முடித்திருக்கவில்லை. சுகவீனமடைந்த நிலையில் தனது சகோதரனின் ஆதரவுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை (18) இரவு, திடீரென இவர் தனது வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பிரேத பரிசோதனை, சட்டவைத்திய அதிகாரி இராஜகுரு தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. அதில், கழுத்து பகுதியில் முறிவு காணப்பட்டதை கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்து முழுமையான பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மர்மமான முறையில் பெண் மரணம்

# கணவன் கைது




■ ரஞ்சித் ராஜபக்ஷ

மஸ்கெலியா, கங்கேவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயொருவர் மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில், அவரது கணவர், மஸ்கெலியா பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (19) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 24 வயதுடைய வசந்தமலர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது மனைவியை நித்திரையிலிருந்து நேற்று முன்தினம் (19) காலை எழுப்பும் போது, அவர் உயிரிழந்திருந்ததாக அப்பெண்ணின் கணவரால், மஸ்கெலியா பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த தம்பதியினர் இருவருக்கும் தொடர்ச்சியாக பிரச்சினைகள் காணப்பட்டதுடன், இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் அப்பெண், அவரது கணவரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் அயல்வாசிகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 18ஆம் திகதி இரவும் தம்பதிகள் இருவருக்குமிடையில் பிரச்சினை ஏற்பட்டதாக அயல்வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## தைப்பொங்கல் விழா...

சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் விழா, ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில், இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (சிவாணி ஸ்ரீ)

மாணவிகளின் முடியை வெட்டும்

# மர்மநபர் கைது

பண்டாரவளை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில், பாடசாலை மாணவிகளின் தலைமுடியை தொடர்ச்சியாக வெட்டும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளையிலிருந்து ஹீல்ஓய வரை பயணித்த பஸ்ஸில், இருந்த மாணவி ஒருவரின் தலை முடியை வெட்டுவதற்கு அந்நபர் முயற்சித்துள்ளார்.

இதையடுத்து, பஸ்ஸில் பயணித்தவர்கள், அவரைப் பிடித்து, பண்டாரவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர் வசமிருந்த பயணப் பையிலிருந்து, பாடசாலை மாணவிகளுடையது என சந்தேகிக்கப்படும் தலைமுடி கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் கத்தரிக்கோல் உள்ளிட்ட சில பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஊவா-பரணகம பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், அவரை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆசிரிய பயிலுநர்

# இருவருக்கு தொற்று

■ சுதத்.எச்.எம்.ஹேவா

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிகலாசாலையொன்றில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர் பயிலுநர் மாணவர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி கே. சுதர்சன் தெரிவித்துள்ளார்.

அவ்விருவரும் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியர் பயிலுநர் கலாசாலைக்கு இம்முறை புதிதாக 68 பேர் வருகை தந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நேற்று முன்தினம் (19) ரெபிட் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே, குறித்த இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

இவர்கள், திம்புள்ளை, பத்தனை, நுவெரெலியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தார்.


# விழிப்புணர்வு செயலமர்வு

■ நடராஜா மலர்வேந்தன்

கல்வி அமைச்சும் சுகாதார அமைச்சும் பதுளை மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த, பாடசாலை மாணவர்களுக்கான தோட்டம், சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு, எல்ல -நிவ்பர்க் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது பதுளை மாவட்ட பொது வைத்தியசாலை சிரேஷ்ட வைத்தியர் கிரிஷான் வேதநாயகம், வளவாளராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு சுகாதார பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பாக தெளிவூட்டல்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





# யாசகர்கள் மீண்டும் சுத்தம் செய்யப்பட்டனர்

■ பி.கேதீஸ்

தலவாக்கலை இளைஞர்கள் மற்றும் தலவாக்கலை பொலிஸார் இணைந்து தலவாக்கலை நகரிலுள்ள யாசகர்களை சுத்தம் செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதற்கமைய நகரிலுள்ள அனைத்து யாசகர்களையும் ஓர் இடத்திற்கு அழைத்து வந்து, அவர்களின் தலைமுடி, தாடிகளை வெட்டிய பின்னர், வெந்நீரில் குளிக்க வைத்து புதிய ஆடைகளை அணிவித்தனர்.

பின்னர் அவர்களுக்கு நன்கு சுவையான உணவுகளையும் பரிமாறினர்.



மாத்தளை மாவட்டத்தில்

# மஞ்சள் விலையில் வீழ்ச்சி

■ இந்திக அருணகுமார

மாத்தளை மாவட்டத்தில் கடந்த காலங்களில் 800 ரூபாய் தொடக்கம் 900 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு கிலோ கிராம் பச்சை மஞ்சளின் விலை, தற்போது 150- 200 ரூபாய் வரை குறைவடைந்துள்ளதாக மஞ்சள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் அன்றாட விலைக்கமைய, பச்சை மஞ்சளின் விலை குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

**“ மாத்தளை மாவட்டத்தில் தற்போது பரந்தளவில் மஞ்சள் செய்கை பண்ணப்படுவதுடன், அங்கிருந்து சந்தைகளுக்கு அதிகமாக மஞ்சள் கிடைப்பதால், மஞ்சளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், மஞ்சள் தூள் ஒரு கிலோ கிராம் 5,000 ரூபாய்கு விற்பனையாகிறது**

மாத்தளை மாவட்டத்தில் தற்போது பரந்தளவில் மஞ்சள் செய்கை பண்ணப்படுவதுடன், தற்போது அங்கிருந்து சந்தைகளுக்கு அதிகமாக மஞ்சள் கிடைத்து வருகின்றமையும் மஞ்சளின் விலை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் என தெரிவிக்கின்றனர்.

எனினும், மஞ்சள் தூள் ஒரு கிலோ கிராம் 5,000 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவறான கருத்துகளும் தீர்மானங்களும் சரிகளைப் பிழைகளாக்குகின்றன

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி நெருக்கடியானது 2029 ஆம் ஆண்டு வரை நீடிக்கும். இந்த அந்நிய செலாவணி பிரச்சினை என்பது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சுதந்திரத்துக்குப் பின்னர், இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்காக செலவாகும் நிதிக்கு ஈடாக வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதுதான் பிரச்சினையின் உண்மையான கதை என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது குறித்துரைத்துள்ளார்.

இன்று இலங்கை மக்கள் அனுபவிக்கும் நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அமைச்சர் கூறும் கதையும் ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், இதைவிட அடிப்படையில் பிரதான காரணமாக அமைவது, சொந்த மக்களுக்கு எதிராக 30 வருடங்களுக்கும் மேலாக பேராயுதங்களை வாங்கிக் குவிப்பதற்காகச் செலவு செய்யப்பட்ட பெருந்தொகையாகும்.

உலக நாடுகளிடம் இருந்தெல்லாம் பேராயுதங்களை, கடனுக்கும் நாட்டை அடகுவைத்தும் கொள்வனவு செய்த ஆயுதங்களின் மதிப்பு, போர் ஆரம்பித்த 70களின் காலப்பகுதியில் இருந்து, இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கிய நிதியில் இருந்து, படிப்படியாக அறிந்து கொள்ள முடியும்.

2009ஆம் ஆண்டு போர் ஓய்வுக்குப் பின்னர்கூட, போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிடக் கூடுதலான நிதியே ஒதுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக சப்புக்கட்டிய காரணங்களையே அரசாங்கம் கூறுகின்றது. ஏனெனில், சாப்பாட்டுக்காகக்கூட பிச்சை எடுக்கும் கீழ்மட்ட வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்ட அரசாங்கம், இன்னும் தான் செய்வது சரி என அதை நியாயப்படுத்தும் காரணங்களைக் கூறுவதற்கு அருகதையற்றது.

ஏனென்றால், பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வழிவகைகள் குறித்து அரசாங்கம் அக்கறை காட்டாது, பிரச்சினைகளை இழுத்தடிப்பதன் மூலம், எவ்வளவு சம்பாதிக்கலாம் என்றே அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை 'வட்டமடிப்பது' தெரிகின்றது. இதுதான் உண்மை நிலை என்று, தீர்வுகள் குறித்த அரசாங்கத்தின் அணுகுமுறையைப் பார்த்து எண்ணத்தோன்றுகின்றது.

ஏனெனில், வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளிடம் அவர்களது கொள்கை அரசியலைக் கைவிட்டு, வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி பாராளுமன்றத்தில் இருந்து அழைப்புவிடுத்தார்.

30 ஆண்டுகால போருக்கும் இத்தனை அழிவுகளுக்கும் இந்த வங்குரோத்து நிலைமைக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்ட இனமுரண்பாட்டுக்குத் தீர்வு காணும் எண்ணம், ஜனாதிபதியின் சிந்தனையில் கிடையாது. தமிழ் மக்களின் சுயநிர்ணய அபிலாஷை கோரிக்கைகளை மறைத்து, அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள் தான் இருக்கின்றது என்பது போன்ற தோற்றப்பாட்டையே ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்ல முனைகின்றார்.

'பிச்சைக்காரனின் புண்போல்' பிரச்சினைகளை வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்துவதுதான் சிலருக்கு பிடித்தமானது. ஆனால், அது சரியான செயற்பாடு அல்ல; முக்கியமாக ஒரு நாட்டின் தலைமைத்துவத்துக்கு இருக்கவே கூடாது. பிரச்சினைகளுக்குச் சரியான முறையில் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்வதே, ஆரோக்கியமான முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்பதை நாம் ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

குறும்புகளும் சேட்டைகளும் சந்தோஷங்களை அள்ளித் தரும். இந்த விடயங்களில் குழந்தைகள் மட்டும்தான் விற்பன்னர்கள் இல்லை. பெரியவர்கள் கூட இந்தக் கலையில் வல்லவர்கள் என்பதில் ஏது ஐயம்? குழந்தைகளின் குறும்பை ரசித்தால் முதியவர்களின் ஆயுள் கூடும்.

எந்தக் குறும்புகளும் ஒருவரின் மனதைக் கொய்வதுபோல அமையக்கூடாது. ஒருவர், இயலாமை, வறுமை, கல்வி, பதவி போன்றவற்றில் தாழ்ந்து நின்றால், அதைக் கண்டபடி பலரின் முன்போ, தனிப்பட்ட முறையிலோ நகைச்சுவை எனும் பெயரில் கேலிசெய்வது, நாகரிகம் அற்ற செயலாகும்.

சின்னப் பிரச்சினைகள் பல, பூதாகரமாக உருவெடுப்பதுண்டு. கேலி செய்வதைக் கூட, ஒரு வரம்புக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் பகடிப் பேச்சுகளை, அறிமுகம் இல்லாத நபர்களிடம் வைத்துக்கொள்ளல் ஆகாது! உங்கள் செயலை ஏற்றுக்கொள்பவரிடத்தில் மட்டும் குறும்பு செய்தால், அது நகைச்சுவைதான் என ஏற்பார்கள்.

வாழ்க்கையில் கடந்துபோகும் ஒவ்வொரு நொடியையும் இரசனையுடன் கழித்திடுக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 03

# குடும்ப அரசியலின் புதிய பரிமாணங்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையில், அரசியல் கட்சிகளிடையே குடும்ப அரசியல் தவிர்க்கவியலாத ஒன்றாகியது.

1970களின் பின்னர், அது புதிய கட்டத்தை அடைந்தது. 1970களில் ஐக்கிய தேசிய கட்சியிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலும் இதேவகையிலான குடும்ப அரசியல், வெவ்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்தியது. இவை, இவ்விரு கட்சிகளின் இருப்புக்குமே ஆப்பு வைக்கும் நிலைக்கு, இறுதியில் சென்றுள்ளதை தற்போதைய அரசியல் நிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சுதந்திரத்துக்குப் பிந்தைய ஏழு தசாப்தகால தேர்தல் அரசியலில், இருபெரும் மையங்களாக நிலைபெற்றிருந்த ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், அவற்றின் முடிவைக் கிட்டத்தட்ட எட்டிவிட்டன.

இதற்குப் பல விடயங்கள், பங்களித்திருந்தாலும் கட்சிகளுக்குள் நிலவிய குடும்ப ஆதிக்கமும் மேட்டுக்குடிசார் மனோநிலையும் கணிசமாகப் பங்களித்துள்ளன. அடித்தட்டு மக்களிடமிருந்து தொடர்ச்சியாக விலகி வந்த இக்கட்சிகளின் அஸ்தமனம் எதிர்பார்க்கப்பட்டதே!

கொலனியாதிக்க காலந்தொட்டே குடும்ப அரசியல், இலங்கை அரசியலின் பகுதியானது. எதுவுமற்றவர்கள் எவ்வாறு செல்வாக்குள்ள அனைத்துமுடையவர்களாக மாறினார்கள் என்பதை, குமாரி ஜெயவர்தனவின் '*Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka*' என்ற நூல் மிக ஆழமாகவும் விரிவாகவும் பதிவிட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையிலும் சில முக்கிய நிகழ்வுகள் நடந்துள்ளன. இதன்வழி 1970ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னரான சில நிகழ்வுகளை நோக்குவோம்.

தேர்தலில் வெற்றிபெற்று சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராயிருந்த நிலையில், 1971ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியின் விளைவால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின.

சிறிமாவுக்குப் பின்னர் கட்சியை யார் பொறுப்பேற்கப் போகிறார்கள் என்ற கேள்வி இருந்தது. சிறிமாவோவின் ஆதரவாளர்கள், சிறிமா, கட்சியைத் தனது மகனான அநுர பண்டாரநாயக்கவிடமே கையளிப்பார் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால், குறித்த காலப் பகுதியில் அநுர, இலங்கையில் இருக்கவில்லை. அவர், தனது மேற்படிப்பை இலண்டனில் மேற்கொண்டிருந்தார். இந்நிலையில், சிறிமாவோவின் மூத்த மகள் சுனேத்திரா பண்டாரநாயக்க, பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக இருந்தார். மெதுமெதுவாக அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவராக அவர் மாறினார்.

இப்பின்புலத்தில், 1972ஆம் ஆண்டு செப்டெம்பரில், குமார் ரூபசிங்க என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இருவரும் இணைந்து சிறிமாவோவின் அரசாங்கத்தில், மறைமுகமாகச் செல்வாக்குச் செலுத்துபவர்களாக மாறினார்கள்.

1971 கிளர்ச்சி சுதந்திரக் கட்சிக்குள் ஏற்படுத்தியிருந்த நெருக்கடியால், கட்சியில் இருந்த சில இடதுசாரிகள், குமார் ரூபசிங்கவை அடுத்த தலைவராக்கவியலும் என நினைத்தார்கள். அதன்படி அவர்கள் 'ஜனவேகய' என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அதன் தொடர்ச்சியாக, ஜனவேகய' என்ற சிங்கள இதழையும் 'ஜனவேகம்' என்ற தமிழ் இதழையும் வெளியிட்டார்கள்.

ரூபசிங்க, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். சுனேந்திரா பண்டாரநாயக்க - குமார் ரூபசிங்க தம்பதிகள் அரசாங்கத்தில் செலுத்திய ஆதிக்கம் குறித்து, 1974ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி, 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை ஒரு கட்டுரையை எழுதியது. ஒரு கட்டத்தில் ரூபசிங்க, அரசாங்கத்தில் செல்வாக்குள்ள அமைச்சரும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மைத்துனரும் சிறிமாவோவின் ஆலோசகராகவும் இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாநாயக்கவுடன் முரண்பட்டார். இது அரசாங்கத்தில் தம்பதிகளின் அதிகரிக்கும் செல்வாக்கைக் காட்டுவதாகக் கருதப்பட்டது.

இந்நிலையில், தனது கல்வியை முடித்து 1974இல் நாடுதிரும்பிய அநுர பண்டாரநாயக்க, அம்மாவுக்குப் பின்னர் தனக்கே தலைமைப்பதவி என நினைத்திருந்தார்.

அவர் நேரடியாக அரசியலில் இறங்கினார். சிறிமாவோ, அவரை சுதந்திரக் கட்சியின் இளையோர் அணித் தலைவராக நியமித்தார். பின்னர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இயக்குநர் பதவி, ரூபசிங்கவிடமிருந்து அநுரவுக்குக் கைமாறியது.

'ஜனவேகய' க்குப் போட்டியாக அநுர, தனது ஆதரவாளர்களின் உதவியுடன் 'அத' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இவருக்கு பீலிக்ஸ் டயஸ் பண்டாநாயக்க உதவியாக இருந்தார். இவ்வாறு, வாரிசு அரசியல் இருவருக்கும் இடையிலான நேரடிப் போட்டியானது.

கலாவெவ தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஆர்.பி. ரட்ணமலல 1974இல் இறந்ததையடுத்து நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட அநுர விரும்பினார். ஆனால் அவருக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. போட்டியிடுகின்ற முதலாவது தேர்தலிலேயே தோல்வியடையக் கூடாது எனவும் அறிமுகமில்லாத ஒரு தொகுதியில் போட்டியிடுவது உசிதமல்ல எனவும் சிறிமாவோ நினைத்தார் எனப் பின்னாளில் சொல்லப்பட்டது. இக்காலப்பகுதியில் 'ஜனவேகய' வேகமிழக்கத் தொடங்கியது.

1977ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்ததையடுத்து, ரூபசிங்கவின் அரசியல் கனவு கலைந்தது. இதே காலப்பகுதியில் ரூபசிங்கவுக்கும் சுனேத்திராவுக்கும் இடையில் மணமுறிவு ஏற்பட்டது. இலங்கையில், ரூபசிங்கவின் இரண்டாவது இனிங்ஸ் 1998ஆம் ஆண்டு தொடங்கியது.

அதற்கிடையில் நடைபெற்ற சில விடயங்கள் சுவையானவை. தேர்தல் முடிவுகள், தனது அரசியல் எதிர்காலத்துக்கு முற்றுப்புள்ளியிட்ட நிலையில், நோர்வேயில் இயங்கும் சமாதான ஆய்வு நிறுவகத்தில் பணிக்குச் சேர்ந்தார். அங்கிருந்த காலத்தில், எரிக் சொல்ஹெய்முடன் பழக்கம் ஏற்பட்டது. பல அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய ரூபசிங்க, 1992ஆம் ஆண்டு பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் *International Alert (IA)* என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தில் செயலாளர் நாயகமாகப் பொறுப்பேற்றார். *IA* உலகின் பல மூன்றாமுலக நாடுகளில் மோதல் தவிர்ப்பு, சமாதான முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டிருந்தது.

1997ஆம் ஆண்டு சியாரா லியோனில் நடைபெற்ற சதியின் விளைவாக, ஜனநாயக முறைப்படி தெரியப்பட்ட ஜனாதிபதியான *Dr. Ahmad Tejan Kabbah* பதவி நீக்கப்பட்டார். அங்கிருந்து அண்டை நாடான கினியாவுக்குத் தப்பிச்சென்ற ஜனாதிபதி, அமெரிக்க ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு 1997ஆம் ஆண்டு ஒக்டோபர் ஐந்தாம் திகதி ஒரு நேர்காணலை வழங்கினார்.

அதில் அவர் "கடந்த ஆறு ஆண்டுகளாக எங்கள் நாட்டில் கிளர்ச்சிப்படையொன்று உருவாக்கப்பட்டு, செயற்பட்டு வருகிறது. அதை மூன்றாம் தரப்பொன்று இயக்குகிறது. அத்தரப்பு *IA*. அதன் செயலாளர் நாயகமாக ஓர் இலங்கையர் உள்ளார்" என்றார். இது சர்வதேச ரீதியில் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கியது.

சியாரா லியோனின் ஜனாதிபதி குறிப்பிட்ட கிளர்ச்சிக்குழுவின் பெயர் புரட்சிகர ஐக்கிய முன்னணி (*Revolutionary United Front-RUF*). 1991ஆம் உருவாகிய இவ்வாயுதக் குழுவுக்கு லைபீரியாவில் மிகப்பெரிய ஆயுதக்குழுவான தேசிய தேசபக்தி முன்னணியின் தலைவரான சார்ள்ஸ் டெயிலரின் ஆதரவு, மிகப்பெரிய பலமாக இருந்தது.

இவ்விரண்டு குழுக்களும் இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து விற்பதையே தொழிலாகக் கொண்டிருந்தன. சியோரா லியோனின் வைரம், தங்கச் சுரங்கங்கள் நிறைந்த பகுதிகளை புரட்சிகர ஐக்கிய முன்னணி கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அவர்களின் துணையுடனேயே ஜனாதிபதி கப்பாவுக்கு எதிரான சதி அரங்கேறியது.

தனது நேர்காணலில் ஜனாதிபதி கப்பா, "*IA* வைரத்தையும் தங்கத்தையும் இங்கிருந்து கடத்திச் செல்வதில் ஆர்வமாக இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. இதனால் அவர்கள் புரட்சிகர ஐக்கிய முன்னணி ஆட்களுடன் நெருங்கிப் பழகியதோடு அவர்களுக்கு உதவியும் செய்தார்கள். 1995இல் சட்டவிரோதமான முறையில் குமார் ரூபசிங்க புரட்சிகர ஐக்கிய முன்னணி ஆட்களுடன் தங்கியிருந்துள்ளார்" என்றார்.

இக்குற்றச்சாட்டுகள் பிரித்தானியப் பாராளுமன்றில் கேள்விக்குள்ளாகின. 1998இல் குறித்த நிறுவனத்தை விட்டு இலங்கை மீண்டார் ரூபசிங்க.

இலங்கையில் புதிய அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றைத் தொடங்கி, பத்தாண்டுகள் நடத்தினார். அந்நிறுவனத்திற்கு பிரதான நிதி வளங்குநர்களாக நோர்வேஜிய அரசாங்கம் இருந்தது. 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தை முயற்சிகளும் ரூபசிங்கவின் நிறுவனத்துக்கு வாய்ப்பானது.

அனேகமான மேற்குலகத் தூதராலயங்கள் அந்நிறுவனத்துக்கு நிதியுதவி வழங்கின. 2008ஆம் ஆண்டு நோர்வேஜியத் தூதராலயத்தால் குறித்த நிறுவனம் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவருக்கான நிதிகள் நிறுத்தப்பட்டதோடு நிதி மோசடியில் ஈடுபட்ட பணம் மீளக் கோரப்பட்டது.

தான் சிக்கலில் இருப்பதை உணர்ந்த ரூபசிங்க, அரசாங்கத்திடம் தஞ்சமடைந்தார். நோர்வே தூதராலயத்துக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி இராஜதந்திரிகளுக்கு இருக்கும் விடுபாட்டுரிமையை (*diplomatic immunity*) மீறி அவர்களுக்கு பிடிவிறாந்து அனுப்பினார்.

இது இலங்கைக்கு, இராஜதந்திர ரீதியில் அவமானத்தைத் தேடித்தந்தது தான் மிச்சம். 1970களில் நடைபெற்ற இன்னொரு குடும்ப அரசியல் சண்டையோடு அடுத்தவாரம் சந்திப்போம்.

## கடிதங்கள்

திருக்கோவில் பிரதான வீதிகளில்

### கட்டாக்காலி மாடுகளின் தொல்லை

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்தில் இரவு வேளைகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இக்கட்டாக்காலி மாடுகள், இரவு வேளைகளில் பிரதான வீதிகளில் கூட்டமாகவும் தனியாகவும் நிற்பதால், வீதிகளில் அதிக விபத்துகள் ஏற்பட்டு, மனிதர்களும் மாடுகளும் காயமடைகின்றன. சிலவேளைகளில் மாடுகளும் இறந்து போகின்றன.

இரவு நேரங்களில் வைத்தியசாலைக்கு முன்பாக, தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாக, திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் என பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் உறங்குகின்றன. இதனால் இரவு நேரத்தில் அவசர தேவைக்குச் செல்வோரும் அம்பியுலன்ஸ் வண்டிகளும் தர்மசங்கடமான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றன.

மேலும், மாலை வேளை முதல், தம்பிலுவில் மத்திய சந்தைக் கடைகளில் உள்ள மரக்கறிகள், பொருட்களை மாடுகள் வேட்டையாடுகின்றன. இது போன்று, கட்டாக்காலி மாடுகளால் பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேச சபையே தீர்வு காண வேண்டிய இந்தப் பிரச்சினைக்கு, வெகுவிலையில் சாதகமான தீர்வை பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

(காரைதீவு நிருபர் சகா)



திறன் படைத்த பணியாளர்களுக்கு

# ஜப்பான் செல்லும் வாய்ப்பு

இலங்கையர்களை ஜப்பானுக்கு உள்வாங்கும் திறன் படைத்த ஊழியர் நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி பங்கேற்றிருந்தார். இந்நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் ஊக்குவிப்பு மற்றும் சந்தைப் பரம்பல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன, மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த திட்டத்தினூடாக இலங்கையர்களை உள்வாங்குவதற்கு முன்னெடுக்கப்படும் பரீட்சை ஜனவரி 25 ஆம் திகதி ஆரம்பமாகி அடிக்கடி இடம்பெறும்.

இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை கொண்டாடும் வகையில், இலங்கையின் திறன் படைத்த தொழிலாளர் படைக்கு ஜப்பானில் இரு பிரிவுகளில் தொழில் வாய்ப்புகளை வழங்கி, ஆதரவளிக்கவுள்ளது. அதனூடாக இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்பாடல்களை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

தாதியியல் பராமரிப்பு, உணவு சேவைகள் போன்ற பிரிவுகளில் திறன் படைத்த இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகள் காணப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் ஜப்பானிய மொழிப் பரீட்சைக்கும், திறன் பரீட்சைக்கும் இலங்கையில் தோற்ற முடியும்.

மேலதிக தகவல்களுக்கு இலங்கையின் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் பணியகத்தின் இணையத்தளத்தைப் பார்க்கவும்.



SLT–MOBITEL புதிய தொனிப்பொருள்

# 'No Dream Too Big' அறிமுகம்

SLT-MOBITEL, தனது புதிய தொனிப்பொருளான 'No Dream Too Big' ஐ அறிமுகம் செய்துள்ளது. புதுவருடத்தை குறிக்கும் வகையில், ஸ்ரீ லங்கா டெலிகொம் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வரவேற்பு பகுதியில் இந்த அறிமுகம் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் SLT-MOBITEL சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர். SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, SLT பணிப்பாளர் மொஹான் வீரகோன் பிசி, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென, பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெர்னாண்டஸ், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

பாரம்பரிய முறைகளின் பிரகாரம், தேசிய கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் பாடப்பட்டது. சமயத் தலைவர்கள் பிரசன்னமாகி புதுவருடத்தை முன்னிட்டு நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் ஆசி வழங்கியிருந்தனர். இந்த நிகழ்வின் போது சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களால் பிரதான புத்தாண்டு உரைகள் ஆற்றப்பட்டிருந்தன.

SLT-MOBITEL இன் புதிய மற்றும் பிரத்தியேகமான தொனிப்பொருளான 'No Dream Too Big' என்பதன் அறிமுகத்தின் நோக்கம், மக்களுடன் தொடர்பை பேணி, அவர்களின் உள்ளங்களை வெல்வதாக அமைந்துள்ளது.

SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ உரையாற்றும் போது, நிறுவனத்தின் மீது ஊழியர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்காக நன்றி தெரிவித்ததுடன், 2022 ஆம் ஆண்டில் நிறுவனம் எய்துவதற்கு திட்டமிட்டுள்ள பிரதான செயற்றிட்டங்கள் பற்றியும் விளக்கமளித்திருந்தார்.

SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "எதிர்காலத்தை பற்றி கருதும் போது, நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன். உங்களின் ஆதரவுடன் எம்மால் 2022 ஆம் ஆண்டில் பெருமளவு சாதிக்க முடியும். SLT குழுமத்தை பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனமாக திகழச் செய்வதுடன், டிஜிட்டல் இலங்கையை சாத்தியப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும். SLT-MOBITEL ஐச் சேர்ந்த நாம் தொழில்நுட்பத்தின் மையத்தில் காணப்படுவதுடன், வழிநடத்திச் செல்லும் செயலணியாக சிறந்த நிலையில் அமைந்துள்ளது. உங்கள் அனைவரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்காகவும், எமது சிறந்த நிறுவனத்தின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டுக்காகவும் சகலருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், புது வருடத்திலும் உங்கள் அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன்" என்றார்.

ஒரு வருடத்துக்கு முன்னதாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக நாம ஒன்றிணைப்பு இடம்பெற்ற முதல், இலங்கையை டிஜிட்டல் மயமாக்கத்துக்கு உட்படுத்துவதில் பெருமளவு பங்களிப்பு வழங்கியிருந்தது. ஒன்றிணைந்த வழிமுறையினூடாக, SLT-MOBITEL இனால் பலதரப்பட்ட தொலைத்தொடர்பாடல் அப்ளிகேஷன்கள் மற்றும் தீர்வுகளுடன், ஒன்றிணைந்த தொழில்நுட்பங்களை அனுகும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதனூடாக வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறையில் தாக்கம் செலுத்தும் தொலைத்தொடர்பாடல் அனுபவங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பிரத்தியேகமான டிஜிட்டல் அனுபவங்களை கட்டியெழுப்பும் வகையில், SLT-MOBITEL இனால் ஹோம் புரோட்பான்ட் சேவைகளை நிர்வகிப்பதற்கு Amazon Alexa திறன்களை நிர்வகிக்கும் வசதிகளை ஏற்படுத்தியிருந்த முதலாவது இலங்கை நிறுவனமாக அமைந்துள்ளது. மேலும், SLT-MOBITEL இனால் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் one-stop customer support gateway, 'MySLT App' என்பது அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதனூடாக விறுவிறுப்பான ஒப்பற்ற சுயபராமரிப்பு அனுபவங்கள் வழங்கப்படுகின்றன.

2022ஆம் ஆண்டின் அறிமுகத்துடன், SLT MOBITEL தொழில்நுட்பத்தின் மையமாக திகழும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வாழ்க்கையை மாற்றியமைக்கும் வழிகாட்டியாகவும் தன்னை நிலை நிறுத்தியுள்ளது. முன்னர் செயற்படுத்தப்பட்ட தந்திரோபாயத் திட்டங்கள் நிறுவனத்தின் பாரிய வெற்றிகரமான செயற்பாடுகளில் பெருமளவு பங்களிப்பு செலுத்தியுள்ளதுடன், வளர்ச்சி மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, வாடிக்கையாளர் பராமரிப்பு, விற்பனைகள், சந்தைப்படுத்தல் சாதனங்கள் போன்ற பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.




தர்மபுரி

'சில்லி சிக்கன்' உட்கொண்ட

# 40 பேர் மீது வழக்கு



சில்லி சிக்கன் எனப்படும் கோழி இறைச்சியால் செய்யப்பட்ட உணவை உட்கொண்ட 40 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில், தர்மபுரி மாவட்டம் முக்கல்நாய்க்கன்பட்டி கிராமத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி ஒரு கிலோ கிராம் சில்லி சிக்கன் சாப்பிடும் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

பந்தல் அமைத்து ஒரே இடத்தில் 15 கிலோ கிராம் கோழி இறைச்சியை 15 பேருக்கு பரிமாறி போட்டி நடத்தப்பட்டுள்ளது. தனிமனித இடைவெளியின்றி அமர்ந்து ஒரு கிலோ சில்லி சிக்கனை இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிட்டுள்ளனர்.

இப் போட்டியை ஏராளமானோர் கண்டு இரசித்துள்ளனர். இந்நிலையில் கொரோனா ஊரடங்கு விதிகளை மீறியதாகவும் தொற்றுப் பரவும் வகையில் கூட்டத்தை கூட்டியதாகவும் விழா நடத்தியோர் மற்றும் போட்டியில் பங்கேற்றவர்கள் உள்ளிட்ட 40 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஆந்திரா

குடும்பப் பிரச்சினையால் தவித்தவரை

# கொன்றது கொரோனா



கொரோனாவால் இளைஞர் ஒருவர் வைத்தியசாலையின் 4 ஆவது மாடியிலிருந்து குதித்து தன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் ஆந்திர மாநிலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம், சித்தூர் பகுதியைச் சேர்ந்தவர் விஜய். 30 வயதான இவர் குடும்பப் பிரச்சினை காரணமாக நஞ்சருந்தி தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளார்.

எனினும், இது குறித்துத் தகவல் அறிந்த அவரது குடும்பத்தினர், உடனடியாக அவரைமீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் கொரோனா பரிசோதனையும் மேற்கொண்டுள்ளனர்.

அதில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனால் அச்சமடைந்த இளைஞர், குறித்த வைத்தியசாலையின் 4 ஆவது மாடியில் இருந்து குதித்துள்ளார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாக இறந்தார்.

திரிபுரா

# இரண்டு தலையுடன் பிறந்த கன்றுக்குட்டி



திரிபுரா மாநிலம் கோமதி மாவட்டத்தில் இரண்டு தலை மற்றும் நான்கு கண்களுடன் கன்றுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.

சமதல் பாரா கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் வளர்த்து வரும் பசுவொன்றே, கடந்த சில நாள்களுக்கு முன்பு குறித்த அதிசய கன்றுக்குட்டியை ஈன்றுள்ளது.

மேலும் குறித்த கன்றுக்குட்டியைப் பார்வையிட பலர் வருகை வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அக் கன்றுக் குட்டியின் புகைப்படங்களும் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த கால்நடைத்துறை அதிகாரி, "இது போன்ற நிகழ்வுகள் மிக அரிதானது. கன்றுக்குட்டியின் உயிர் பிழைப்பு விகிதம் மிகவும் குறைவாகவே இருப்பதால் அதனை காப்பாற்றுவது மிகவும் கடினம்" என்றும் தெரிவித்துள்ளார்.

# பெண்ணால் பிடிபட்ட 'நைட்டி' திருடன்



கேரள மாநிலம் கோட்டயம், தலையோலப்பரம்பில் வசித்து வருபவர் ஓய்வு பெற்ற இராணுவ வீரரான மாத்தியூ (54). அவருடைய மனைவி சூசம்மா (50). இவர்களுடைய மகள் சோனா; இவர் திருமணமாகி பெரம்பலூரில் கணவருடன் வசித்துவருகிறார்.

வீட்டில் வயதான தாய் தந்தையர் இருப்பதால், சோனா தனது வீட்டில் ஒரு சுற்று கமெராக்களை வைத்து இடையிடையே வீட்டை தனது மொபைல் போன் மூலம் கண்காணித்து வந்தார்.

அதுபோல், மொபைல் போன் மூலம் நேற்று முன்தினம் (19) கண்காணித்தார். வீட்டின் மாடி பகுதியைப் பார்த்த போது 'நைட்டி' அணிந்த ஆண்ணொருவர் நிற்பது தெரிந்தது. அவர் திருடன் என்று சந்தேகித்து, உடனடியாக தலயோலப்பரம்பு பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார்.

பொலிஸார் ஜீப்பில் புறப்பட்டு சோனா வீட்டிற்கு சென்று, வீட்டை சுற்றி வளைத்து மாடியில் பதுங்கியிருந்த திருடனை சுற்றி வளைத்து பிடித்தனர்.

திருடன், கோட்டயம் கீழுர் பகுதியைச் சேர்ந்தவன் என்றும் பெயர் ரொபின்சன் (32 ) என்பதும் வெளியானது. இவன் பிரபல கிரிமினல் என்றும், பகல் நேரங்களில் முதியவர்கள் தனியாக வசிக்கும் வீடுகளை குறிவைத்து இரவு நேரங்களில் இதுபோல வீடுகளின் மாடியில் பதுங்கியிருந்து நள்ளிரவு வீட்டில் இருக்கும் முதியவர்கள் உறங்கும் போது அவர்களை தாக்கி பணம், நகை கொள்ளை அடிப்பது பழக்கம் என்று தெரிகிறது.

இந்தியா

கொரோனாவால் பெற்றோரை இழந்த

# சிறார்களுக்கு இழப்பீடு



இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பெற்றோரை இழந்த 10,000 சிறார்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரி உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்நிலையில் குறித்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியதாவது:

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டிய 50,000 ரூபாய் இழப்பீட்டை, கேரளம், ஆந்திரம், தெலுங்கானா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், குஜராத், பிகார் ஆகிய மாநிலங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கே வழங்கியுள்ளமை கண்டிக்கத்தக்கது.

தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தகவலின்படி, கொரோனா பரவத் தொடங்கிய பிறகு நாடு முழுவதும் கிட்டத்தட்ட 10,000 சிறார்கள் தொற்று பாதிப்பு மற்றும் இதர காரணங்களால் பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரையும் இழந்துள்ளனர். தங்களுக்கான இழப்பீட்டு தொகையை வழங்கக் கோரி விண்ணப்பிப்பது கூட அச் சிறுவர்களுக்கு கடினம்.

இதனால் கொரோனாவால் தாய், தந்தை இருவரையும் இழந்த சிறார்கள், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய வலைத்தளத்தில் விவரங்களுடன் இடம்பெற்றுள்ள சிறார்கள் ஆகியோரை அணுகி மாநில அரசுகள் இழப்பீடு வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தனர்.

டெல்லி

அலைபேசியை விழுங்கிய

# கைதியால் பரபரப்பு

கைதியொருவர் அலைபேசியை விழுங்கிய சம்பவம் புதுடெல்லி, திகார் சிறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் பாதுகாப்பு காரணம் கருதி, கைதிகளிடம் அடிக்கடி சோதனை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த 5ஆம் திகதி அதிகாரிகள் சோதனை நடத்தியபோது, 29 வயது மதிக்கத்தக்க கைதியொருவர், பிடிபட்டுவிடுவோம் என்ற பயத்தில், தான் வைத்திருந்த அலைபேசியை விழுங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட அதிகாரிகள் அக்கைதியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு அவருக்கு எண்டோஸ்கோபி செய்த வைத்தியர்கள் வாய்வழியாக அலைபேசியை எடுத்துள்ளனர். இதனையடுத்து சிகிச்சைகளுக்குப் பின்னர் அக்கைதி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பிரித்தானியா

அடுத்த வியாழன் முதல்

# முகக்கவசம் தேவையில்லை

அடுத்த வியாழக்கிழமை முதல் பிரித்தானியாவில் முகக் கவசம் அணிய விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதாக அந்நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "வீட்டில் இருந்தவாறு பணியுரியுமாறு ஊழியர்களை இனி அரசு



அறிவுறுத்தாது. அவரவர் அலுவலகம் சென்று பணிபுரிய அனுமதி வழங்கப்படுகிறது.

அத்துடன் சுய தனிமைப்படுத்தல், கொரோனா ஹெல்த் பாஸ் உள்ளிட்ட நடவடிக்கைகளில் இருந்து மக்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதாகவும், வரும் வாரம் முதல் பொது இடங்கள் மற்றும் உள்ளரங்கு நிகழ்ச்சிகளில் மக்கள் முக கவசம் அணிவது கட்டாயமில்லை என்றும் போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

வைத்தியர் கொடுத்த வயாகராவால்

## உயிர் பிழைத்த தாதி

உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த செவிலியர் ஒருவரை வைத்தியர் ஒருவர் 'வயாகரா' கொடுத்து காப்பாற்றிய விநோத சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள லிங்கன்ஷையரைச் சேர்ந்தவர் மோனிகா அல்மெய்டா. 37 வயதான அவர் அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் செவிலியராக பணிபுரிந்து வந்துள்ளார். இந்நிலையில் இவருக்கு கடந்த நவம்பர் மாதம் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதோடு அதனால் அவரது உடல்நிலையும் மிகவும் மோசமடைந்துள்ளது.

இதனால் மருத்துவர்கள் அவரை *induced coma* நிலைக்குக் கொண்டு சென்றனர். இதையடுத்து அவருக்கு பல்வேறு முறைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும், அவரது உடல்நிலையில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் இருந்துள்ளது.

இதனால் மருத்துவர்கள் சோதனை சிகிச்சை முறையில் மோனிகா அல்மெய்டாவுக்கு மிக அதிக டோஸ் கொண்ட வயாகரா மாத்திரையை அளித்துள்ளனர். இதனையடுத்து சுமார் 28 நாள்களுக்குப்பின்னர் , அவர் கோமாவில் இருந்து கண் விழித்துள்ளார்.

இது குறித்துத் தெரிவித்த மருத்துவர், "வயகரா மாத்திரைகள் இரத்த நாளங்களைத் தளர்வு அடையச் செய்து, அனைத்துப் பகுதிகளுக்கும் அதிக இரத்தம் பாய அனுமதிக்கிறது. இதன் மூலமே அவர் கோமாவில் இருந்து மீண்டார்" எனத்தெரிவித்துள்ளனர்.



ஸ்கொட்லாந்து

## எக்ஸ்ரே மூலம் கொரோனா பரிசோதனை

ஒமிக்ரோன் எனப்படும் உருமாற்றம் அடைந்த கொரோனாத் தொற்றுப் பரவலானது உலகம் முழுவதும் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது.

இந்நிலையில் ஸ்கொட்லாந்தில் உள்ள பல்கலைக் கழக விஞ்ஞானிகள் எக்ஸ்ரே கதிர்களைப் பயன்படுத்தி ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறியும் வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன் இப்பரிசோதனையானது 98 சதவீதம் துல்லியமாக இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக குறித்த பல்கலைக்கழக விஞ்ஞானி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "பி.சி.ஆர். சோதனையை விட எக்ஸ்ரே சோதனை வேகமாக இருக்கும். கொரோனாத் தொற்றைக் கண்டறிய விரைவான மற்றும் நம்பகமான கருவிகளின் தேவை நீண்டகாலமாக உள்ளது.


கொரோனா நோயாளிகள், ஆரோக்கியமானவர்கள் மற்றும் நிமோனியா உள்ளவர்கள் ஆகியோருக்கு சொந்தமான சுமார் 3,000 படங்களின் ஸ்கேன்களை ஒப்பிடுவதற்கு எக்ஸ்ரே தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

ஆனாலும் நோய் தொற்றின் ஆரம்ப கட்டங்களில் எக்ஸ்ரேயில் கொரோனா அறிகுறிகள் தெரியவில்லை. எனவே பி.சி.ஆர் சோதனைகளை முழுமையாக மாற்ற முடியாது. எங்களது ஆய்வை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பிரித்தானியா

வாரத்தில் 4 நாள்கள் மாத்திரமே

## இனிமேல் வேலை




பிரித்தானியாவில் *Canon* நிறுவனம் உட்பட 30 நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அடுத்த ஆறு மாதங்களுக்கு வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரமே வேலை செய்ய வேண்டும்" என்ற புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் படி, ஊழியர்கள் மொத்தமான 35 மணிநேரம் என வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரமே வேலை செய்வார்கள் என்றும், இதன் மூலம் பிரித்தானியாவில் உற்பத்தி திறன் ஊழியர்களால் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளிலும் இந்தப் புதிய திட்டத்தை அமலுக்கு கொண்டுவருவதன் மூலம் உற்பத்தி திறன் அதிகரிக்கின்றதா? என்ற சோதனை மேற்கொள்ளப்பட உள்ளது.

அமெரிக்கா

## 5G யால் விமான நிறுவனங்கள் அச்சம்




5ஜி தொழில்நுட்பத்தால் விமான சேவையில் பாதிப்பு ஏற்படும் என அமெரிக்க விமான நிறுவனங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

இது குறித்து அமெரிக்கன் எயார்லைன்ஸ், டெல்டா எயார்லைன்ஸ், யுனைடெட் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் தலைமை நிர்வாகிகள், அமெரிக்க விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், 5ஜி தொழில்நுட்பத்தால் விமானப் பயணிகள், சரக்கு ஏற்றுமதி, மருத்துவ விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் விமான ஓடுபாதைகளின் அருகே இருந்து 5G சமிக்ஞைகள் விலக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

பொய்யான தகவலைப் பதிவிட்டால்

## 5 வருடம் சிறை



இணையதளங்களில் ஆதாரமில்லாமல் வதந்திகளை பரப்புவோருக்கு 5 வருடம் சிறை தண்டனை விதிக்கப்படுமென சவுதி அரேபிய அரசு அறிவித்துள்ளது.

அந்நாட்டில் அண்மைக்காலமாக இணையத்தளங்களில் போலிச்செய்திகள் அதிகளவில் பரப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சவுதி அரேபிய அரசு இணையதளங்களில் தவறான தகவல்களை ஆதாரமில்லாமல் பரப்பினால் 5 ஆண்டுகள் சிறைதண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று மூன்றாவது போட்டி: டி.எஃப்.சி.சி தொடரை

# கைப்பற்றுமா இலங்கை?

இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது பல்லேகலவில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியை சிம்பாப்வேயும் வென்ற நிலையில் தீர்மானமிக்க போட்டியாக இப்போட்டி அமைகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் ஜெஃப்ரி வண்டர்சே ஏனைய வீரர்கள் அனைவரும் தொடர்ச்சித் தன்மையைக் காண்பிக்க வேண்டியுள்ளனர். குறிப்பாக பந்துவீச்சு மேம்படவேண்டியுள்ளது. அந்தவகையில் நுவான் பிரதீப்பை புதுமுகவீரர் நுவான் துஷார பிரதியிடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக வெற்றி அணியை சிம்பாப்வே மாற்றாது என எதிர்பார்க்கப்படுகிறது. தொடரின்



வெற்றிக்காக அணித்தலைவர் கிரேய்க் எர்வின், ஷோன் வில்லியம்ஸ், சிகண்டர் ராசா, றெஜிஸ் சகபாவின் ஓட்டங்கள் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

தவிர, இனிங்ஸ் முழுவதும் விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டியவர்களாக சிம்பாப்வே பந்துவீச்சாளர்கள் காணப்படுகின்றனர்.

சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இலங்கைக்கு மற்றுமொரு தங்கம்:

## தங்கப் பதக்கம் வென்றார் சாதீர்



சண்முகம் தவசிலன்

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையில் நடைபெற்ற 2ஆவது சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணி 7 தங்கப் பதக்கங்கள் மற்றும் 5 வெள்ளிப் பதக்கங்களை வெற்றி கொண்டு சம்பியனாக மகுடம் சூடியது.

இந்நிலையில், கண்டி, ஹுலுகங்கை பகுதியைச் சேர்ந்த ஏ.எம். சாதீர் 25 வயதுக்குட்பட்ட 70-75 கிலோ கிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.





அக்கரப்பத்தனை அயோனா வி.க தொடர்:

## சம்பியனான அக்னி

துவாரகஷான்

அக்கரப்பத்தனை அயோனா விளையாட்டு கழகம் வரலாற்றில் முதல் தடவையாக இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்கும் வகையில் அணிக்கு ஏழு பேர் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரானது அயோனா தோட்ட பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் உள்ளூர் மட்டத்தில் உள்ள எட்டு அணிகள் மாத்திரம் கலந்துகொண்டன. இதில், இறுதிப் போட்டியில் லக்ஷ்மி கழகத்தை வென்று அக்னி அணி சம்பியனாகியது.

சம்பியனான அக்னி அணிக்கும், இரண்டாமிடம் பெற்ற லக்ஷ்மி கழகத்துக்கும் வைத்திய அதிகாரி வேலு முத்துமணி, சமூக சேவையாளர் எம். சந்திரகுமார், நலன்விரும்பியான ஆர். குணசீலன், தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் செல்வராஜ், கே. ஜெகநாதன், எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ் உள்ளிட்ட பணப் பரிசுகளையும் வழங்கி வைத்தனர்.

இதற்கான ஒழுங்குகளை ஊடகவியலாளர் கே. புஷ்பராஜ், எஸ். சுரேஷ், கே. ஞானசேகர் ஆகியோர் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவை வீழ்த்திய தென்னாபிரிக்கா




தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்தியா தோற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்ளில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஆரம்பத்திலேயே ஜனமென் மலனை ஜஸ்பிரிட் பும்ராவிடம் இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் குயின்டன் டி கொக்கை இரவிச்சந்திரன் அஷ்வினிடம் இழந்ததுடன், அடுத்து வந்த ஏய்டன் மார்க்ரமும் உடனேயே ரண் அவுட்டானார்.

இதைத் தொடர்ந்து பவுமாவும், றஸி வான் டர் டுஸனும் இணைந்து இனிங்ஸைக் கட்டியெழுப்பியதோடு, ஓட்டங்களைச் சேகரித்த நிலையில் 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 296 ஓட்டங்களை தென்னாபிரிக்கா பெற்றது. பவுமா 110 (143), வான் டர் டுஸன் ஆட்டமிழக்காமல் 129 (96) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பும்ரா 10-0-48-2, அஷ்வின் 10-0-53-1, யுஸ்வேந்திர சஹால் 10-0-53-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 297 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்திலேயே பதில் அணித்தலைவர் லோகேஷ் ராகுலை ஏய்டன் மார்க்ரமிடம் இழந்தது. இதைத் தொடர்ந்து ஷீகர் தவானும், விராட் கோலியும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 79 (84) ஓட்டங்களுடன் கேஷவ் மஹராஜ்ஜிடம் தவானும், 51 (63) ஓட்டங்களுடன் கோலியும் தப்ரையாஸ் ஷம்சியிடம் வீழ்ந்தனர்.

அடுத்து வந்த ஷ்ரேயாஸ் ஐயர், றிஷப் பண்ட், வெங்கடேஷ் ஐயர், இரவிச்சந்திரன் அஷ்வின், புவ்னேஷ்வர் குமார் ஆகியோர் லுங்கி என்கிடி (2), அன்டிலி பெக்லுவாயோ (2), தப்ரையாஸ் ஷம்சியிடம் வீழ்ந்தனர்.

ஷர்துல் தாக்கூர் ஆட்டமிழக்காமல் 50 (43) ஓட்டங்களைப் பெற்ற நிலையில், 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 265 ஓட்டங்களையே பெற்ற இந்தியா 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், தப்ரையாஸ் ஷம்சி 10-1-51-2, லுங்கி என்கிடி 10-0-64-2, அன்டிலி பெக்லுவாயோ 5-0-26-2, கேஷன் மஹராஜ் 10-0-42-1, ஏய்டன் மார்க்ரம் 6-0-30-1, மார்கோ ஜன்சன் 9-0-49-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக றஸி வான் டர் டுஸன் தெரிவாகினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 21 ஜனவரி 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.